ஏவி எம்
புரொடக்ஷன்ஸ்
களத்தூர்
கண்ணம்மா
டைரக்ஷன்: A. பீம்சிங்
AVM
புரொடக்ஷன்ஸ்

கண்ணம்மாவைக் காண, எவ்வளவு ஆவலுடன் திரும்பிவந்தேன். ஆனால் அவளைப்பற்றிக் கேள்விப் பட்ட செய்தி! பெண் இனத்தின் மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. தந்தையின் நெஞ்சுருகும் வேண்டுகோளை மறுக்க மனமின்றி, ஜமீன் அந்தஸ்திற்கு ஏற்ற ஒருத்தியை மணக்கவும் சம்மதித்தேன். அப்பொழுது தான் என் வாழ்க்கையில் புகுந்தான்......

ராஜா

'அப்பாவும் நீயே, அம்மாவும்நீயே' என்று முருகனையே நினைந்து வளர்ந்து வந்தேன். எங்கள் பள்ளிக்கூடத்துக்கு வந்து சேர்ந்தாங்க ஒரு புது டீச்சரம்மா. எங்கிட்டதான் அவங்களுக்கு எவ்வளவு பிரியம். அவங்களுக்கு மட்டும்தானா? பள்ளிக்கூட நாடகத்திற்குத் தலைமை வகிக்க வந்த சின்ன ஜமீந்தாருக்கும்தான்.

செல்வம்

நான் அப்பாவும் அம்மாவும் இல்லாத அனாதை என்று நினைத்தேன். எனக்கு அப்பாவும் அம்மாவும் மட்டுமா? இரண்டு தாத்தாக்களும் கூட கிடைத்தார்களே. எப்படி.........?

AVM PRODUCTIONS

களத்தூர் கண்ணம்மா

பாடல்கள்

இயற்றியவர் : கவிஞர் கண்ணதாசன்

பாடியவர்கள் : A. M. ராஜா, சுசீலா

பெண் : கண்களின் வார்த்தைகள் புரியாதோ
காத்திருப்பேனென்று தெரியாதோ
ஒருநாளில் ஆசை எண்ணமே மாறுமோ

ஆண் : கண்களின் வார்த்தைகள் புரியாதோ
காத்திருப்பேனென்று தெரியாதோ
ஒருநாளில் ஆசை எண்ணமே மாறுமோ
(கண்களின்)

ஆண் : தேடித்திரிந்தேன் ஓடோடிவந்தேன்
செல்லக்கிளியே கோபமா

பெண் : தென்றல் மறந்தார் தெம்மாங்கு பாடும்
சிலையை மறந்தே ஓடினர்

ஆண் : உனை மறவாமலே—வந்த
துணை நானன்றோ (கண்களின்)

ஆண் : வண்ணக்கொடியே வண்டாடும் மலரே
எண்ணமிருந்தும் நாணமா

பெண் : பாவலர் தமிழின் பண்பான காதல்
மௌனக் கலையன்றோ—பெண்மை
மனதின் நிலையன்றோ
பாடும் மனதின் பண்பான ஆசை
பார்வை வழியே தோன்றுமே

ஆண் : இனி வரும் நாளெல்லாம்—நம்
திருநாளன்றோ— (கண்களின்

இயற்றியவர் : கு. மா. பாலசுப்ரமணியம்
பாடியவர்கள் : A. M. ராஜா, P. சுசீலா

ஆண் : ஆடாத மனமும் ஆடுதே
ஆனந்தகீதம் பாடுதே
வாடாத காதல் இன்பமெலாம்
வா வா நாம் காணலாம் (ஆடாத)
ஆண் : கோவைக் கனிபோலே—இதழ்
கொஞ்சும் என் வானமுதே
பெண் : பாவை என் நெஞ்சில்—புதுப்
பண்பாடும் ஆணழகே
ஆண் : இனி வாரேரும் காணாத ஆனந்தமே
பெண் : இனி வாரேரும் காணாத ஆனந்தமே
(ஆடாத)
ஆண் : ரோஜா !
பெண் : ஆ !
ஆண் : புது ரோஜா !
பெண் : ஊஹூம் !
ஆண் : அழகு ரோஜா மலர்தானோ—எழில்
வீசும் உன் கன்னங்களோ
பெண் : பாசம் கொண்டாடும்—கண்கள்
பாடாத வண்டுகளோ
ஆண் : இனி பேசாமல் காண்போம் பேரின்பமே
பெண் : இனி பேசாமல் காண்போம் பேரின்பமே
(ஆடாத)

இயற்றியவர் : கவிஞர் கண்ணதாசன்
பாடியவர் : C. S. ஜெயராமன்

சிரித்தாலும் அழுதாலும் நிலை ஒன்றுதான்
சென்றாலும் நின்றாலும் வழி ஒன்றுதான்
தொடர்ந்தாலும் முடிந்தாலும் கதை ஒன்றுதான்
தாழ்ந்தாலும், வாழ்ந்தாலும் தரம் ஒன்றுதான்
(சிரித்தாலும்)

இணைவதிலே இன்பம்
பிரிவினிலே துன்பம்
உலகினில் மாருத நீதி
வருவதுபோல் வந்து
நிலைப்பதுபோல் நின்று
மறைவதுதான் வாழ்வில் பாதி

(சிரித்தாலும்)

ஆனந்த வெறியேறி
ஆயிரம் பொய்கூறும்
மானிட சமுதாய எல்லை—இதில்
தன்னலம் கருதாத
தாய்மையை மறவாத
பெண்மையும் இல்லாமல் இல்லை

(சிரித்தாலும்)

இயற்றியவர் : T. K. சுந்தரவாத்தியார்
பாடியவர் : M. S. ராஜேஸ்வரி, கோரஸ்.

அம்மாவும் நீயே அப்பாவும் நீயே
அன்புடனே ஆதரிக்கும் தெய்வமும் நீயே (அம்மாவும்)

தந்தை முகம் தாயின் முகம் கண்டறியோமே—மனச்
சாந்தி தரும் இனிய சொல்லைக் கேட்டறியோமே
எங்களுக்கோர் அன்பு செய்ய யாருமில்லையே—இதை
அறியாயோ முருகா உன் கருணையில்லையோ
முருகா முருகா முருகா (அம்மாவும்)

பூனை நாயும் கிளியும் கூட மனிதர் மடியிலே—பெற்ற
பிள்ளை போல நல்லுறவாய் கூடி வாழுதே
ஈயெறும்பும் உன் படைப்பில் இனிமை காணுதே
—இதை
அறியாயோ முருகா உன் கருணை இல்லையோ
முருகா! முருகா! முருகா! (அம்மாவும்)

இயற்றியவர் : கவிஞர் கண்ணதாசன்
பாடியவர் : A. M. ராஜா

அருகில் வந்தாள் உருகி நின்றாள் அன்பு தந்தாளே
அமைதியில்லா வாழ்வு தந்தே எங்கு சென்றாளோ
பிரிவாலே மோதும் துயர் போதும் போதுமே!
(அருகில்)

மலரே மலரே நீயாரோ?
வஞ்சனை செய்தவர்தான் யாரோ—உனைச்
சூடி முடித்ததும் பெண்தானே—பின்
தூக்கி எறிந்ததும் அவள்தானே! (அருகில்)
இதயம் என்பது ஒரு வீடு
அன்றும் இன்றும் அவள் வீடு—அது
மாளிகை ஆனதும் அவளாலே—பின்
மண் மேடானதும் அவளாலே (அருகில்)

இயற்றியவர் : M. K. ஆத்மனாதன்
பாடியவர் : ஜிக்கி

மலரில் மது எதற்கு?
மதுவில் சுவை எதற்கு?
மனதில் ஆசை வளரும்போது
மனிதன் ரசிப்பதற்கு (மலரில்)
கண்ணில் தோன்றும் இன்பம்—
எல்லாம் நம் சொந்தம்
காலம் நேரம் பார்த்தால் வருமோ ஆனந்தம்
பெண்ணைப் பாரு கவலைகள் மறையும்
பேசிப்பாரு புதுமைகள் தெரியும்
இன்ப நிலை காணவா—கண்ணாளா! (மலரில்)
வளரும் உலகின்மேலே—வாழ்வது சில நாளே
வருவதை அனுபவியாமல்—திரிவது எதனாலே
தாகம் தீர்க்க கனிரசம் உண்டு
தனிமை நீக்க பூங்கொடி உண்டு
தேனமுது பருகவா கண்ணாளா! (மலரில்)

இயற்றியவர் : கொத்தமங்கலம் சுப்பு

பாடியவர்கள் : T. M. சௌந்தரராஜன், S. C. கிருஷ்ணன், M. S. ராஜேஸ்வரி, A. P. கோமளா, & கோரஸ்

கழுதை : உனைக்கண்டு மயங்காத மிருகமுண்டோ
வடிவழகிலும் குணமதிலும் சிறந்த (உனை)

குரங்கு : ஸ்டாப்! ஸ்டாப்! ஸ்டாப்!

கழுதை : ஏன்? ஏன்? ஏன்?

குரங்கு : சுதிசேரலே!

கழுதை : தம்பூரா இல்லே!

குரங்கு : அப்ப, ராக் ராக் ராக்

கழுதை : அது ஜோக் ஜோக் ஜோக்

கோரஸ் : காட்டுக்கும் வந்தது ராக் அன் ரோல்
நாட்டுக்குச் சிறந்தது காடு—இந்தக்
காடே எங்கள் வீடு
நாமே மன்னர் ராக் ராக் ராக்
நாமே மந்திரி ஜோக் ஜோக் ஜோக்
ராக்ராக் ராக்ராக்—ஜோக்ஜோக்
ஜோக்ஜோக்

சிங்கம் : திரிலோகமும் புகழும் சுந்தர
தீரவீர சிங்கம் நானே
அரியாகப் பிறந்தேனே
அரசாளவே வந்தேனே
கரியாகிலும் பரியாகிலும்
நரியாகிலும் இறையாக்கிடும்
(தீர வீர)

முயல் : சிங்க மாமா ! சிங்க மாமா !—இந்தச்
சின்ன முயல் தன்னை நீ திங்கலாமா!

சிங்கம் : அடி சின்னவள் எனக்குப் புத்திசொல்லப்
போமா
பரிஸாஸ நீநி பாநி பாநி பாம கரி
(சின்னவள்)

குட்டிமுயல்: உடலும் துடிக்குதே—என்
உள்ளம் கொதிக்குதே
எளியவர் தம்மை வலியவர் வாட்டும்
கொடுமை தீராதா
எலியும் பூனையும் சேர்ந்தே வாழும்
காலம் வாராதா (உடலும்)

தாய்முயல்: ஏன் மறந்தாய் மகனே !
ஏன் மறந்தாயோ !
இல்லை ஒரு வழியும் என்று
ஏங்கியே தவிக்காதே
வல்லவனையும் மதியால் வென்றுவிடலாம்
—இதை (ஏன் மறந்தாய்)

குட்டிமுயல்: போருக்குப் புறப்படுவேன்—அந்தப்
பொல்லாத சிங்கத்தைக்
கொல்லாது விடுவேனோ (போருக்கு)
புலி கரடி யானை அனைவரும் சேரும்
பொதுப்பணி செய்யவே
எல்லோரும் வாரும் (போருக்கு)

முயல் : பருத்த யானையே நீதான்
பொருத்தமானவன்

யானை : இந்த பாலிடிக்ஸிலே நான்
பட்டுக்கொள்ளமாட்டேன்

குரங்கு : ஜெய் ! ஜானகி காந்தஸ்மரணே

கோரஸ் : ஜெய் ஜெய் ராம் !

குரங்கு : நானே ஸ்ரீராம பக்த ஹனுமான் —
நானே ஸ்ரீராம பக்தன்—அந்த
நரசிம்ஹ மூர்த்தியை எதிர்ப்பேனே
பித்தன்
நீயோ குழிமுயல் சித்தன்—காட்டின்
நீதியை மாற்றிட நினைக்கும் உன்மத்தன்
(நானே)

முயல் : நெஞ்சு பொறுக்குதில்லையே—இந்த
நிலைகெட்ட உங்களை நினைந்து விட்டால்
(நெஞ்சு)

கோரஸ் : போகாதே போகாதே குட்டித்தம்பி
பொல்லாத சிங்கம் விழுங்கிவிடும்

முயல் : ஆறிலும் சாவுண்டு நூறிலும் சாவுண்டு
அன்னையின் ஆணையை காக்கப்போரேன்
அன்னையின் ஆணையை நிறைவேற்றுவேன்
—அந்த
அக்ரமக்காரனின் ஆட்சியை மாற்றுவேன்

முயல் : தேடிவந்தேன் சிங்கராஜா
எங்கராஜா—தங்கராஜா—மகராஜா
பீடி சுருட்டுகளில் ட்ரேட் மார்க் சிங்கம்
பாடி பெருத்த பயில்வான் தாராசிங்கம்
தாடி நரைத்து இப்போ தளர்ந்து
போனயே
தாக்க எதிரியும் வந்தானே !—உன்னை
தாக்க எதிரியும் வந்தானே
கண்டேனே—சொல்ல வந்தேனே

சிங்கம் : எனக்கும் எதிரியா ! எனக்கும் எதிரியா!
எட்டி உதைப்பேன் கட்டி அடிப்பேன்
ரத்தம் குடிப்பேன்—ஹா ஹா ஹா

முயல் : உருவம் எல்லாம் உங்களைப் போலே
—குரலோ
உங்களுக்கும் ஒன்பது பங்குகள் மேலே

சிங்கம் : அவன் எங்கிருக்கிறுன் ?

முயல் : வராய்! நீ வாராய்
போகுமிடம் வெகுதூரமில்லை (வாராய்)
எட்டி எட்டிப் பாருங்கள் கிணற்றிலே
குட்டி முயல் கெட்டிக்காரத்தனம் தெரியும்

சிங்கம் : நான் அரசனாக உள்ள கானகத்தில்
—வேறொருவன்
தான் அரசனாகி விடவா!
நசுக்கிப் பிழிந்துன்னை நான் இன்று
கொல்லுவேன்
நாய் நரிக்கு இரையாக்குவேன்

கோரஸ் : டடடா, டடடா, டடடா, டடடா
டடடா, டடடா, டடாடடா!
உன் கண் உன்னை ஏமாற்றவே
எங்கள் கொடுமை தீர்ந்ததடா (டடடா)
சக்தியினாலே ஆகாதது
புத்தியினாலே முடிந்ததடா (டடடா)
எடடா மாலை கொடடா மணிமுடி
இனி நமக்கரசன் முயல்தாண்டா (டடடா)

கொலம்பியா

ரிக்கார்டுகளில்

ஏவி. எம். புரொடக்ஷன்ஸ்

களத்தூர் கண்ணம்மா

படப்பாட்டுகளை கேளுங்கள்

GE. 34101	அம்மாவும் நீயே அப்பாவும் நீயே கண்களின் வார்த்தைகள்
GE. 34102	ஆடாத மனமும் அருகில் வந்தாள்
GE. 34103	சிரித்தாலும் அழுதாலும் மலரில் மது எதற்கு
GE. 34133	அன்பே தெய்வம்— குழந்தைகள் நாடகம் பாகங்கள் 1 & 2

Columbia

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்-2.

Vadapalani Press, Madras-26.